# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# MCOP. No.161/2021

2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **எ.ம.சா.3 வது** நபரின் வாக்குமூலம். (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிசாமி | வயது | : | |
| த/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது ஆதார் அட்டையின் நகல் அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டு அது எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

வாகன ஓட்டுநர் ரவி மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. சம்பவத்தன்று ரவி உடன் மூன்று பேர் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தோம். நாங்கள் சென்ற இருசக்கர வாகனம் HONDA SHINE வாகனம். எதிரில் வந்த இறந்துபோன முத்தையா வந்த வாகனம் TVS 50 என்றால் சரியல்ல. ரவிக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் தெரியாது. அந்த வண்டிக்கு இன்சூரன்ஸ்ம் கிடையாது என்றால் தெரியாது. நான் இரண்டாவது நபராக இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்திருந்தேன். ரவி என் ஊர்க்காரர். மூன்று பேர் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தது குற்றம் என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்தபிறகு போலீசார் எப்போது வந்தார் என்று எனக்கு தெரியாது.

முத்தையா சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான். நாங்கள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றோம். முத்தையா மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தார். அவர் வந்த திசையில் வேறு எந்த வாகனமும் வரவில்லை என்றால் சரிதான். முத்தையா அவருடைய இடதுபுறம் தான் வந்துகொண்டிருந்தார். நான் ரோட்டின் முன்புறம் தான் பார்த்துக்கொண்டு சென்றேன். ரவி அதிவேகமாக சென்று எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எங்கள் மூவருக்கும் சொற்ப காயம் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. ரவி என் ஊர்க்காரர் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் பொய் சாட்சியம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.